RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்
www.malaithanthi.in

DAILY EVENING — மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 226 | ஆகஸ்டு 21, 2026 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# தென் மாநில முதல்வர்கள் மாநாடு: முதல்வர் விஜய் பேசியது என்ன?

சென்னை: ஆக.21-

'காவிரி விவகாரத்தில் உச்ச நீதிமன்ற தீர்ப்பை மதிக்க வேண்டும். முல்லைப் பெரியாறு அணை நீர்மட்டத்தினை 152 அடியாக உயர்த்த வேண்டும். நீட் தேர்வில் தமிழகத்துக்கு விலக்கு அளிக்க வேண்டும்' என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை தென்மண்டல முதல்வர்கள் கூட்டத்தில் தமிழக முதல்வர் விஜய் வலியுறுத்தியுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமையில், தென் மண்டலக் குழுவின் 31-வது கூட்டம், இன்று (ஆகஸ்ட் 20) கோவளத்தில் நடைபெற்றது. இந்த தென் மண்டலக் குழுவில், ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, கேரளம், தமிழ்நாடு, தெலங்கானா ஆகிய மாநிலங்களும், புதுச்சேரி, அந்தமான் & நிக்கோபார் தீவுகள், லட்சத்தீவு ஆகிய யூனியன் பிரதேசங்களும் உறுப்பினர்களாக உள்ளன.

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தென் மண்டலக் குழுவின் தலைவராகவும், தமிழக முதல்வர் விஜய் துணைத் தலைவராகவும் உள்ளனர். இந்தக் கூட்டத்தில் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, கர்நாடக முதல்வர் டி.கே. சிவகுமார், கேரள முதல்வர் வி.டி.சதீசன், தெலங்கானா துணை முதல்வர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய தமிழக முதல்வர் விஜய், "நீல பொருளாதார மேம்பாட்டுக்கு அண்டை மாநிலங்களுடன் இணைந்து செயல்பட தயாராக இருக்கிறோம். தென் மண்டல மாநிலங்களின் வளர்ச்சிக்கு கடல்சார் பொருளாதரத்திற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். இதில் ஒருங்கிணைந்த செயல்பாட்டால் துறைமுகம், சரக்கு போக்குவரத்து, மீன்வளம், கடல் சுற்றுலா ஆகியவை மேம்படும்.



சரக்கு கப்பல் போக்குவரத்து விரிவாக்கம் மூலம் போக்குவரத்து செலவு குறைவது தொழில்துறையை மேம்படுத்தும். 1,076 கிலோ மீட்டர் கொண்ட கடல் வழிப் போக்குவரத்து, சுற்றுலா வளர்ச்சிக்கு மாநிலங்களுடன் இணைந்து செயல்பட தயார்.

போதைப் பொருளை ஒழிப்பதில் ஒருங்கிணைந்த செயல்பாடு தேவை. காவிரி விவகாரத்தில் உச்சநீதிமன்றம், காவிரி மேலாண்மை ஆணைய உத்தரவுகள் மதிக்கப்பட வேண்டும். கீழ்நிலை நீர் பிடிப்பு மாநிலங்களின் சட்டபூர்வ உரிமைகள், மக்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட வேண்டும். நதிநீர் மேலாண்மைக்காக உருவாக்கப்பட்ட அமைப்புகளின் முடிவுகள் அமல்படுத்தப்பட வேண்டும்.

முல்லைப் பெரியாறு அணை நீர்மட்டத்தினை 152 அடியாக உயர்த்த நீதித்துறை உத்தரவுப்படி சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். பரஸ்பர நம்பிக்கை, அறிவியல் ஆதாரங்கள் சட்டத்தின் மீதான மதிப்போடு நதிநீர் பிரச்சினையை அணுக வேண்டும்.

பிளஸ் டு தேர்வு மதிப்பெண்களின் அடிப்படையிலேயே மருத்துவ மாணவர் சேர்க்கை நடத்த அனுமதி வழங்க வேண்டும். மருத்துவ படிப்புகளுக்கான நீட் நுழைவுத் தேர்வால் கிராமப்புற ஏழை மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர். எனவே நீட் தேர்வில் தமிழகத்திற்கு விலக்கு அளிக்க வேண்டும்.

தொகுதி மறுவறையால் எந்த மாநிலமும் பாதிக்கப்படாது என்ற சட்டபூர்வ உறுதிமொழி தேவை. தொகுதி மறுவரையறையால் எந்த ஒரு மாநிலத்தின் பிரதிநிதித்துவம் குறையாது என மத்திய அரசு சட்டபூர்வ உத்தரவாதம் தர வேண்டும். போதைப் பொருள்களின் ஆன்லைன் விற்பனையை தடுக்க சட்ட விதிகளை கடுமையாக்க வேண்டும். மாநிலங்களுக்கிடையே உளவுத் தகவல்களை பகிர்வதன் மூலம் தென் மாநிலங்கள் இணைந்து செயல்பட வேண்டும்.

தென் மாநிலங்களில் ஒருங்கிணைந்த தொழிற்பேட்டைகளை அமைக்க வேண்டும். கர்நாடகாவின் பொம்மச்சந்திரா - ஓசூர் வரை மெட்ரோவை நீட்டிக்கும் திட்டம் சிறந்த உள்கட்டமைப்பாக இருக்கும். நாட்டின் பொருளாதாரத்தில் தென் மாநிலங்கள் 30 சதவீதம் பங்களிப்பை வழங்குகின்றன. எனவே தென்மாநிலங்களின் செயல் திறன், வளர்ச்சி, முதலீடுகளை கருத்தில் கொண்டு நியாயமான நிதி பகிர்வை வழங்க வேண்டும். ஜிஎஸ்டி வரம்புகளை தீர்மானிக்கும் நெகிழ்வுத் தன்மையை மாநிலங்கள் மீண்டும் பெறவேண்டும்" என்று தெரிவித்தார்.

## 3 தமிழர்கள் சுட்டுக் கொலை: பாமக உண்மை அறியும் குழு கூறியது என்ன?

தருமபுரி: ஆக.21-

கர்நாடகாவில் தமிழர்கள் 3 பேர் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் இருக்கும் உள்நோக்கத்தை வெளிக்கொணர, சிபிஐ விசாரணை செய்ய வேண்டும் என பாமக-வின் உண்மையறியும் குழுவினர் வலியுறுத்தினர்.

கர்நாடக மாநிலம் சாம்ராஜ்பேட்டை மாவட்டம் ஹனூர் வனப்பகுதியில் தமிழர்களான அந்தோணிசாமி உள்ளிட்ட 3 பேர் கடந்த 15-ம் தேதி கர்நாடக வனத்துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

வனத்தில் வேட்டையாட வந்த மூவரும் வனத்துறையினரை தாக்க முயன்றபோது வனத்துறையினர் சுட்டதால் உயிரிழந்தனர் என அம்மாநில அரசு விளக்கம் அளித்துள்ளது.

இதற்கிடையில், அங்கு நடந்த சம்பவம் குறித்து விசாரித்து வருவதற்காக தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த பாமக முன்னாள் எம்எல்ஏ-க்கள் வேலுசாமி, வெங்கடேஸ்வரன், நிர்வாகிகள் சண்முகம், அரசாங்கம், கிருஷ்ணகிரி மாவட்ட நிர்வாகிகள் மஞ்சுநாத், சரவணன் ஆகியோர் அடங்கிய குழுவை அக்கட்சித் தலைவர் அன்புமணி ராமதாஸ் அனுப்பி வைத்தார்.

இக்குழுவினர், கடந்த 18-ம் தேதி நேரில் சென்று உயிரிழந்த 3 பேரின் குடும்பத்தினரையும் சந்தித்து ஆறுதல் தெரிவித்ததுடன், நடந்த சம்பவம் குறித்தும் விசாரணை நடத்தி வந்தனர்.

இந்நிலையில், நேற்று அவர்கள் தருமபுரியில் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர். அப்போது அவர்கள் கூறியதாவது:

சுட்டுக்கொல்லப்பட்ட அந்தோணிசாமி (50), ஜான் ரோஸ் பீட்டர் (42), குமார் (36) ஆகிய மூவர் மீது இதுநாள் வரை எந்த குற்ற வழக்கும் இல்லை. காணாமல் போன கால்நடைகளை தேடச் சென்ற அந்தோணிசாமி உறவினர்களையும் உடன் அழைத்துச் சென்றுள்ளார்.



நீண்ட நேரம் தேடியும் கால்நடைகள் கிடைக்காததால் இரவு வனத்திலேயே பாறைமீது படுத்து உறங்கியுள்ளனர். 15-ம் தேதி அதிகாலையில் அப் பகுதிக்கு வந்த வனத்துறையினர் அவர்களுக்கு மிக அருகாமையில் நின்று சுட்டுக் கொன்றுள்ளனர்.

சற்று தொலைவில் படுத்திருந்த ஒரு நபர் மட்டும் தப்பி பிழைத்திருக்கிறார். அவர் மூலம்தான் வனத்தில் நடந்த தகவல் வெளியுலகுக்கு தெரியவந்துள்ளது.

தற்காப்புக்காக சுட்டதாகக் கூறும் வனத்துறையினர், குண்டு பாய்ந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்க, 150 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மைசூரு அரசு மருத்துவமனைக்கு 3 பேரின் உடல்களையும் சரக்கு வாகனம் ஒன்றில் அடுக்கி வைத்து எடுத்துச் சென்றுள்ளனர்.

மொத்தத்தில் இந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் திட்டமிட்டு நடத்தப்பட்ட கொலை. இது தொடர்பாக அண்டை மாநிலங்கள் கருத்து தெரிவிக்கக் கூடாது என கர்நாடக மாநில முதல்வர் டி.கே.சிவக்குமார் தெரிவித்துள்ளார்.

காவிரியின் குறுக்கே மேகேதாட்டு பகுதியில் புதிய அணை கட்டும் நடவடிக்கை தொடர்பாக தமிழகத்தில் இருந்து யாரும் அப்பகுதிக்கு நேரில் சென்று உண்மை நிலையை அறிய முயற்சிக்கக் கூடாது என்பது அம்மாநில அரசின் உள்நோக்கமாக தெரிகிறது.

சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் நடந்த பகுதிக்கு அருகில் தான் அணை கட்டும் பகுதியும் அமைந்துள்ளது. கர்நாடக மாநில ஆளும் கட்சியும், அம்மாநில வனத்துறையும் திட்டமிட்டே இந்த கொலையை செய்துள்ளனர். குறிப்பாக கொல்லப்பட்டவர்கள் தமிழர்கள் என்பதால் இந்த சம்பவத்தை முழுவதுமாக மூடிமறைக்க கர்நாடக அரசு முயற்சிக்கிறது.

இந்த சம்பவம் தொடர்பான உண்மை வெளிவர வேண்டுமெனில் தமிழக அரசு கோரியிருப்பதுபோல சிபிஐ விசாரணை வேண்டும்.

இந்த செயலில் ஈடுபட்ட வனத்துறையினரின் பெயர் பட்டியலை வெளியிட்டு அவர்களுக்கு உரிய தண்டனை பெற்றுத் தர வேண்டும். எங்கள் விசாரணை அறிக்கை அன்புமணி மூலம் உள்துறை அமைச்சர் பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு உரிய நீதி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு கூறினர்.

## "ரேஷன் அரிசி ஆடு, கோழிக்கு தீவனமா?" - அமைச்சர் செங்கோட்டையன் கருத்துக்கு திமுக கண்டனம்

சென்னை: ஆக.21-

ரேஷன் அரிசியை மக்கள் ஆடு, கோழிக்குத் தீவனமாகத்தான் பயன்படுத்துகின்றனர் என்று அமைச்சர் செங்கோட்டையன் பேசியதற்கு, ஏழைகள் சாப்பிடும் உணவைக் கொச்சைப்படுத்துவதா என எ.வ.வேலு, கே.என். நேரு உள்ளிட்ட திமுகவினர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனிடையே, அனைவரும் உண்ணும் வகையில் சன்ன ரக அரிசி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் ஆதவ் அர்ஜுனா பதிலளித்தார்.

சட்டப்பேரவையில், அமைச்சர் செங்கோட்டையன் பேசுகையில், ரேஷனில் அரிசி வாங்கும் அனைவரும் ஆடுக்கும் கோழிக்கும்தான் தீவனமாக பயன்படுத்துகிறார்கள் என்பது நாடு அறிந்த உண்மை" என்று தெரிவித்தார். பின்னர், என்ன அர்த்தத்தில் அப்படி சொல்கிறார். ரேசன் அரிசியை தற்போது அனைத்து மக்களும் பயன்படுத்தி கொண்டிருக்கிறார்கள் என முன்னாள் அமைச்சர் கே.என். நேரு பதிலளித்தார்.



அதைத் தொடர்ந்து, முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு பேசுகையில், "திமுக ஆட்சியின் ரேசன் அரிசி திட்டத்தை உச்சநீதிமன்ற நீதிபதிகள் பாராட்டினர். எதிர்க்கட்சியாக இருந்த போது ரேசன் அரிசியை பற்றி பேசியுள்ளாரா செங்கோட்டையன். அவை முன்னவராக இருப்பவர் அவைத் தலைவருக்கு உறுதுணையாக இருந்து அவையை சுமுகமாக நடத்த உதவ வேண்டும். ஆனால், அவரே பிரச்சினையை உண்டாக்கிவிட்டால் எப்படி? ஏழைகள் சாப்பிடும் ரேசன் அரிசியை ஆடு, மாடு சாப்பிடுவதாக கொச்சைப் படுத்தலாமா" என்று கேள்வி எழுப்பினார்.

பின்னர், முன்னாள் அமைச்சர் அண்ணன் நேரு கூட சுகர் குறைய வேண்டும் என ரேஷன் அரிசி தான் சாப்பிடுகிறார் என முன்னாள் அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் தெரிவித்தார். இதனிடையே, ரேஷன் அரிசி இதற்கு முன் எப்படி வேண்டுமானாலும் இருந்திருக்கலாம். ஆனால் இனிமேல், மக்கள் பயன்படுத்தும் வகையில் அது இருக்கும் என உணவுத்துறை அமைச்சர் வெங்கடரமணன் தெரிவித்துள்ளார்.

## "கல்லூரிகளுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில் உள்நோக்கம் இல்லை" - பேரவையில் அமைச்சர் விளக்கம்

சென்னை: ஆக.21-

"போராடும் மாணவர்கள் குறித்து உயர் கல்வித் துறை அனுப்பிய சுற்றறிக்கையில் எந்த உள்நோக்கமும் இல்லை. இந்த அரசுக்கு மாணவர்கள், இளைஞர்களின் உரிமைகளை கட்டுப்படுத்தும் நோக்கம் இல்லை" என சட்டப்பேரவையில் உயர் கல்வித் துறை அமைச்சர் விஸ்வநாதன் விளக்கம் அளித்தார்.

சட்டப்பேரவையில் கவன ஈர்ப்பு பதிவின் மீது பேசிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் மாரிமுத்து, "நாம் சுதந்திர நாட்டில் வாழ்கிறோம். இங்கு அனைவருக்கும் அடிப்படை உரிமைகள் உள்ளன.

உயர் கல்வித் துறை இயக்குநர், உரிமைகளுக்காக போராடும் மாணவர்கள், குறிப்பாக இடதுசாரி மாணவர்களை இனம் கண்டு, அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை சேகரித்து அனுப்ப சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. சுதந்திர நாட்டில் இப்படி உரிமைக்காகப் போராடும் மாணவர்களிடம் சட்டத்திற்குப் புறம்பாக நடந்து கொள்ளலாமா?" என்று கேள்வி எழுப்பினார்.



இதற்கு பதிலளித்த உயர் கல்வித் துறை அமைச்சர் விஸ்வநாதன், "மாணவர்களின் போராட்டங்கள் சம்பந்தமான நடவடிக்கைகள் குறித்து உடனடியாக முதல்வரின் கவனத்துக்கு கொண்டுசெல்லப்பட்டது. மாநில அளவில் சில நேர்வுகளில் நடக்கும் போராட்டங்களில் ஒழுங்கு அமைதி பராமரிக்கப்பட வேண்டியது குறித்த கடிதம் ஆகஸ்டு 17 அன்று உயர் கல்வித் துறை மூலம் கல்லூரி இயக்கத்துக்கு அனுப்பப் பட்டது. அதன்படி கல்வி நிறுவனங்களின் மேற்கொள்ள வேண்டிய ஒழுங்கு அமைதி குறித்து ஆகஸ்டு 20-க்குள் அறிக்கை அனுப்ப வேண்டிய சூழ்நிலை எழுந்தது.

அனைத்து அரசுக் கல்லூரிகளின் கல்வி சூழல் மற்றும் ஒழுங்கமைதி பராமரிக்கப்படுவதை உறுதி செய்வதை முன்னிட்டு அனைத்துக் கல்லூரிகளின் முதல்வருக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டது. அதில் தவறுதலாக சில வாசகங்கள், குறிப்பிட்ட கட்சிகள் மற்றும் அமைப்புகளைப் பற்றி குறிப்பிட்டிருந்தது. அவ்வாறான வாசகங்கள் இடம்பெற்று இருப்பதை அறிந்த கல்லூரி இயக்குனரகம் உடனடியாக மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையைத் திரும்பப் பெற்றது.

இந்த செயல் எவ்வித உள்நோக்கமும் இன்றி, முற்றிலும் கல்வி நிறுவனங்களின் ஒழுங்கமைதியை பராமரித்தல் பற்றிய நோக்கத்தின் பால் அனுப்பப்பட்டது. இந்த அரசுக்கு மாணவர்கள், இளைஞர்களின் உரிமைகளை கட்டுப்படுத்தும் நோக்கம் இல்லை. மாணவர்கள், இளைஞர்கள் நியாயமான உரிமைகளைக் மதிக்கும் அரசாக இந்த அரசு செயல்படும்" என்றார்.

இந்த விவாதத்தில் பேசிய இந்திய கம்யூனிஸ்ட் உறுப்பினர் தளி ராமச்சந்திரன், "இடதுசாரி மாணவர் அமைப்புகள், நீட் எதிர்ப்பு, நீட் வினாத்தாள் கசிவு மற்றும் கட்டணக் கொள்ளைகளுக்கு எதிராகத்தான் ஜனநாயக ரீதியாகப் போராடுகின்றன.

குறிப்பாக, இடதுசாரி மாணவர் அமைப்புகளை மட்டும் குறிவைத்து அரசு இந்தச் சுற்றுறிக்கையை அனுப்பியிருப்பது அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இதற்கு அமைச்சர் விளக்கமாகப் பதிலளித்திருக்கிறார், நன்றி" என்றார்.



■ கிருஷ்ணகிரி மாவட்டம், அஞ்செட்டி வட்டம், கடகநத்தம் மலைக் கிராமத்தில், "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்ட கள ஆய்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் நேற்று (19.08.2026) பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு, அடிப்படை தேவைகள் குறித்து கேட்டறிந்தார். உடன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் உமா மகேஸ்வரி உள்ளிட்ட பலர் உள்ளனர்.







# ஏழை மக்கள் கழக மாநில அமைப்பாளருக்கு பிறந்தநாள் விழா

புதுச்சேரி, ஆக.21-

புதுச்சேரியில் ஏழை மக்கள் கழகத்தின் மாநில அமைப்பாளர் வழக்கறிஞர் கருணாகரன் பிறந்தநாள் விழா சிறப்பாக நடைபெற்றது. புதுச்சேரி ஈ.சி.ஆர். பகுதியில் உள்ள சதர்ன் ரெசிடென்சி ஓட்டலில் கடந்த 18-ஆம் தேதி நடைபெற்ற விழாவுக்கு, ஏழை மக்கள் கழக நிறுவனர் தலைவர் பூக்கடை கமலக்கண்ணன் தலைமை தாங்கினார். சிறப்பு அழைப்பாளராக உதவும் இதயம் பேரியக்க நிறுவனர் கவிஞர் புதுவைக்குமார் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தார். நிகழ்ச்சியில் கழக அமைப்பாளர் வழக்கறிஞர் கருணாகரன், அவைத் தலைவர் மருத்துவர் சார்லஸ், செயல் தலைவர் அண்ணாமலை, துணைத் தலைவர் ஓய்வுபெற்ற காவல்துறை அதிகாரி இளங்கோவன், ஆலோசனைக் குழுத் தலைவர் முன்னாள் ராணுவ வீரர் சசிக்குமார், துணை அமைப்பாளர் ராஜாமணி, கொள்கைப் பரப்புச் செயலாளர் முத்தையன், ஊசுடு தொகுதி தலைவர் ஜெயசங்கர், இந்திரா நகர் தொகுதி தலைவர் சுந்தரராஜன், துணைச் செயலாளர் விமல், ஆன்மிக அணி தலைவி ஜெயசாந்தி உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் சமூக சேவகர்கள் பலர் கலந்து கொண்டு பிறந்தநாள் வாழ்த்துகளை தெரிவித்தனர்.



# கிருஷ்ணகிரி தினசரி மார்க்கெட் கடைகள் திறப்பு எப்போது?

கிருஷ்ணகிர. ஆக.21-

கிருஷ்ணகிரி சந்தைப்பேட்டையில் புதிதாக கட்டப்பட்ட 77 கடைகள் 2024 டிசம்பரில் பணிகள் முடிந்தும், இதுவரை வியாபாரிகளுக்கு திறக்கப்படவில்லை. கடைகள் ஒதுக்கீட்டில் பல தரப்பினர் லஞ்சம் கேட்பதாக வியாபாரிகள் குற்றம் சாட்டினர். இதனால் நேற்று 58 திறந்தவெளி கடைகளில் வியாபாரிகள் காய்கறிகளை வைத்து விற்பனையை தொடங்கிய நிலையில், போலீசார் வந்து கடைகளை மூடுமாறு அறிவுறுத்தினர். தங்களுக்கு பழைய கடைகளையே வழங்க வேண்டும் என வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



■ "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ், திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி ஊராட்சி ஒன்றியம், பேராம்பட்டு ஊராட்சி, சின்னபேராம்பட்டு கேஸ் குடோன் எதிரில் நீண்டகாலம் பயன்பாடு இல்லாமல் கைவிடப்பட்ட ஆழ்துளை கிணற்றை புதுப்பித்து மழைநீர் சேகரிப்பு (Re-charge soft) பணி நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., (19.08.2026) அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் வட்டாட்சியர் நவநீதன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சித்ரகலா, லதா, கந்திலி ஒன்றிய பொறியாளர் கார்த்திகேயன் மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.





■ உலக மனிதநேய தினத்தை முன்னிட்டு , உதகை அரசினர் கலைக்கல்லூரியில் , நீலகிரி கல்வி அறக்கட்டளையின் சார்பில் உலக மனிதநேய விழிப்புணர்வு உறுதிமொழியுடன் மாணவ மாணவிகளிடையே கலந்துரையாடல் நிகழ்வு நடைபெற்றது , சிறப்ப விருந்தினர்களாக நீலகிரி மாவட்ட சமூக தன்னார்வலர்கள் கூட்டமைப்பின் தலைவர் சுரேஷ் ரமணா மற்றும் மேரா யுவபாரத் மாவட்ட பொறுப்பாளர் ரஞ்சித் குமார் கலந்து கொண்டனர் .



■ கிருஷ்ணகிரி மாவட்டம், அஞ்செட்டி வட்டம், எஸ்பிபி (SBP) திருமண மண்டபத்தில், "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் பெற்றுக்கொண்டார். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் மஞ்சுளா, திட்ட இயக்குநர்கள் உமா மகேஸ்வரி (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) சுசீலாராணி (மகளிர் திட்டம்), கூடுதல் காவல் கண்காணிப்பாளர் வேலுமணி, மாவட்ட வழங்கல் அலுவலர் கீதா ராணி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# உதகை ஏடிசி மணிக்கூண்டு பகுதி அருகே போதை ஆசாமி அட்டகாசம்

நீலகிரி, ஆக.21-

நீலகிரி மாவட்டம் ,உதகை மார்க்கெட் பகுதியில் மது போதையில் ஒருவர் வாகனத்தை தாறுமாறாக ஓட்டியதாகக் கூறப்படும் சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பொதுமக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் வாகனம் இயக்கப்பட்டதாக கிடைத்த தகவலின் பேரில், அங்கு சென்ற காவல்துறையினர் சம்பந்தப்பட்ட நபரிடம் விசாரணை மேற்கொண்டதாக கூறப்படுகிறது.

அப்போது, விசாரணைக்கு ஒத்துழைக்காமல் வாக்குவாதத்தில் ஈடுபட்ட அந்த நபர், காவலர் ஒருவரை தாக்கியதாகவும் கூறப்படுகிறது. இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.



இதையடுத்து சம்பந்தப்பட்ட நபரை காவல்துறையினர் கட்டுப்படுத்தி, சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மக்கள் அதிகம் வந்து செல்லும் உதகை மார்க்கெட் போன்ற பகுதியில், மது போதையில் வாகனம் ஓட்டுவது மட்டுமின்றி, விசாரணை மேற்கொள்ளும் காவலரையே தாக்கும் அளவுக்கு நிலைமை சென்றிருப்பது அதிர்ச்சி யளிப்பதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

மது போதையில் இருந்த அந்த நபரை காவலர் தாக்கியதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# தேனி மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் : நடைபெறவுள்ளது

தேனி, ஆக.21-

தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது, தேனி மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வருகின்ற 21.08.2026வெள்ளிக்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா. வைத்திநாதன், தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில்நடைபெறவுள்ளது.




தேனி மாவட்டத்தைச் சார்ந்த விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் அந்தந்த வட்டாரத்தில் உள்ள வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை திட்டங்கள் குறித்த கோரிக்கைகளை விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலந்து கொண்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் மனுக்களாக வழங்கலாம். விவசாயிகளிடமிருந்து பெறப்படும் மனுக்கள், சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அனுப்பி அதன்மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே, விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள், இக்கூட்டத்தில் கலந்து கொண்டு பயனடையலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தெரிவித்துள்ளார்.

# பழனியில் உள்ள சண்முகநதி புனித நதியா அல்லது சாக்கடை நதியா பக்தர்கள் கொந்தளிப்பு

திண்டுக்கல், ஆக.21-

திண்டுக்கல் மாவட்டம் பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் புனித நீராடுவதற்காக சண்முக நதி பகுதியில் முடி காணிக்கை மண்டபம் ஏற்படுத்தப்பட்டு பக்தர்கள் முடி காணிக்கை செலுத்திய பின்பு புனித நீராடுவதற்காக சண்முக நதியை பயன்படுத்தி வருகின்றனர்.. தொடர்ந்து திருக்கோயில் திருவிழா காலங்களில் உடுமலை பொள்ளாச்சி கோயம்புத்தூர் வால்பாறை ஊட்டி மேட்டுப்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வரும் நடைபாதை பக்தர்கள் சண்முக நதியில் தங்கி முடி காணிக்கை செலுத்தி புனித நீராடி வருகின்றனர்..

இந்நிலையில் சண்முக நதி தற்போது சாக்கடை குளமாக காணப்பட்டு வருகின்றன.

தொடர்ந்து அப்பகுதியில் பொதுமக்கள் தங்கள் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்து விட்டு நீராடும் பொழுது துணிகளை ஆற்றிலே விட்டு விடுகின்றனர்.

மேலும் மளிகை பொருட்கள் பழங்கள் போன்றவைகளை ஆற்றில் விடுவதால் நதி மாசடைந்து புழுக்கள் நிறைந்து



காணப்பட்டு வருகின்றன..

தொடர்ந்து நீரின் தன்மை அசுத்தம் அடைந்து பல்வேறு நோய் தொற்று பரவும் அபாயகரமான நிலை காணப்பட்டு வருகின்றன.. தற்போது சண்முக நதியில் நீராடினால் டெங்கு மலேரியா உள்ளிட்ட பல்வேறு நோய் தொற்று ஏற்படும் நிலையே காணப்பட்டு வருகின்றன.. இந்நிலையில் பழனி பகுதியில் உள்ள சமூக ஆர்வலர்கள் கதிர், ரஞ்சித்குமார் சுப்பிரமணியன், மருது, காஞ்சனா, மற்றும் மீனவர்கள் சார்பாக சுத்தம் செய்து வருகின்றனர். தொடர்ந்து அறநிலைத்துறையும் பொதுப்பணித்துறையும் வருவாய் துறையும் இணைந்து சண்முக நதியில் உள்ள அமலைச் செடிகள், துணிகள் குப்பைகளை சுத்தம் செய்தால் திருவிழா காலங்களில் பக்தர்கள் நீராடுவதற்கும் புனித தீர்த்தங்கள் எடுத்துச் செல்வதற்கும் வசதியாக இருக்கும்.

எனவே தற்போது சுத்தம் செய்யும் சமூக ஆர்வலர்களுடன் இணைந்து அரசு துறைகள் சமூகப் பணி செய்ய முன்வர வேண்டும் என பக்தர்கள் வற்புறுத்தி வருகின்றனர்.


# மாம்பாக்கம் மின்சார வாரியத்தில் மின் இணைப்புகளுக்கு கூகுள் பே மற்றும் கட்டாய வசூலில் ஈடுபடும் மின்வாரிய ஊழியர்களின் ஆடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது

மாம்பாக்கம் ஆக்.21-

செங்கல்பட்டு மாவட்டம் வண்டலூர் அடுத்த மாம்பாக்கம் மின்வாரிய அலுவலகத்தில் பணிபுரியும் மின்வாரிய உதவிப் பொறியாளர் மற்றும் போர்மேன் ஆகியோர் புதிய இணைப்புகள் வழங்க விண்ணப்பித்து பல மாதங்கள் ஆகியும் புதிய மின் இணைப்புகள் வழங்காமல் காலம் தாழ்த்தி வருவதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. மேலும் புதிய மின் இணைப்புக்கு விண்ணபித்தோர் தொடர்ந்து மின்வாரிய அலுவலகத்துக்கு அலைக்கழிக்கப்பட்டு பல மாதங்கள் மின் இணைப்புக்காக காத்திருக்கும் சூழ்நிலையை அதிகாரிகள் ஏற்படுத்து கின்றனர்.

பொதுவாக புதிய மின் இணைப்பு வேண்டி பொதுமக்கள் மின்சார வாரியத்திற்கு விண்ணப்பித்திருந்தால் 30 நாட்களுக்குள் மின்



இணைப்பு வழங்க வேண்டும் என்று விதி இருந்தாலும், மாம்பாக்கம் மின்வாரியத்தில் நான்கு மூன்று அல்லது நான்கு மாதங்களாக ஏராளமான விண்ணப்பங்கள் மின் இணைப்பு வழங்காமல் நிலுவையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் இது தொடர்பாக உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தும் கூட மாம்பாக்கம் மின்வாரிய அதிகாரிகள் தொடர்ந்து அலட்சியமாக இருப்பதாகவும் குற்றச்சாட்டு இழுந்துள்ளது

இந்த நிலையில் அனைத்து ஆவணங்களும் முறையாக இருந்தாலும் கூட விரைவாக கிடைக்க வேண்டிய மின் இணைப்புகளுக்கு கூட காலம் தாழ்த்தி அதிகாரிகள் அதனை பயன்படுத்திக் கொண்டு அதிகாரிகளுக்கு மாமூல் கொடுக்கும் விண்ணபங்களுக்கு மட்டும் விரைந்து மின் இணைப்புகள் வழங்கப்படுவதாகவும் லஞ்ச பண்ம் பெறுவதற்காகவே மின் இணைப்பு காலம் தாழ்த்தி மின் இணைப்புகள் வழங்கப்படுவதாகவும் பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர். இது தொடர்பாக மாம்பாக்கம் மின்வாரிய போர் மேன் ரவிச்சந்திரன் மின் இணைப்பு வழங்கப்பட்ட பல நபர்களிடம் பேரம் பேசி பணம் வசூல் செய்யும் ஆடியோவும் சமூக வலைதளத்தில் தற்போது வைராகி வருகின்றனர்.

மாம்பாக்கம் மின்வாரிய அலுவலகத்தில் நீண்ட நாட்களாக பணியாற்றி வரும் போர்மேன், சி.ஏ.வின் பணிகளை சேர்த்து பார்த்து வருவதாகவும், அவர் ஒப்பந்த பணியாளர்களை வைத்து கொண்டு கடுமையாக வசூலில் ஈடுபட்டு வருவதாக மற்றம் மின்வாரிய ஊழியர்களே குற்றச்சாட்டி வருகின்றனர்.

மாம்பாக்கம் மின்வாரிய அலுவலகத்திலேயே மின் வாரிய ஏ.டி. அலுவலகமும் செயல்பட்டாலும் எதனை கண்டுக்கொள்ளாமல் ரவிசந்திரன் வசூல் வேட்டையில் ஈடுபட்டு வருவதாக கூறப்படுகிறது.

இது தொடர்பாக மின்வாரிய அதிகாரிகள் ஆட்சி மாறினாலும் காட்சி மாறுவதில்லை என்பதற்கு ஏற்றார் போல் தொடர்ச்சியாக மாம்பாக்கம் மின்வாரியத்தில் அதிகாரி களின் மாமுல் வேட்டை தொடர்ச்சியாக நடந்து வருவதாக பொதுமக்கள் வேதனை தெரிவிக்கின்றனர் இது தொடர்பாக உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டு கொள் விடுத்துள்ளனர்,

# பல்லாவரத்தில் மாவீரன் ஒண்டிவீரன் 255-வது நினைவேந்தல் நிகழ்ச்சி நிறைவு






செங்கல்பட்டு, ஆக.21-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரத்தில் அருந்ததியர் சமுதாயத்தின் மாவீரன் ஒண்டிவீரனின் 255-வது நினைவேந்தல் நிகழ்ச்சி இன்று ஆகஸ்ட் 20 காலை பல்லாவரம் அருந்ததி புரத்தில் நடைபெற்றது. நிகழ்வில் மாவீரன் ஒண்டிவீரனின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, வீரவணக்கம் செலுத்தப்பட்டது. இதில் திமுக நிர்வாகிகள், அருந்ததி கட்சி நிர்வாகிகள், சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு மாவீரன் ஒண்டிவீரனுக்கு மரியாதை செலுத்தினர். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி 2வது மண்டல குழு தலைவர் ஜோசப் அண்ணாதுரை, 13-வது வார்டு மாமன்ற உறுப்பினர் ரேணுகாதேவி பரமசிவம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியை அருந்ததி கட்சியின் நிறுவனர் மற்றும் பொதுச் செயலாளர் ப.தேவேந்திர ராவ் ஒருங்கிணைத்தார். இதில் அருள் ஒளி ஆனந்தராஜ், ஏழுமலை, 13வது வார்டு திமுக பிரமுகர் விஜயகுமார், செங்குட்டுவன், லோகநாதன், மோகன கிருஷ்ணன், வட்ட பிரதிநிதி திமுக எம்.ஜி.பதி, 13-வது வார்டு ஜோசப், அருந்ததி மக்கள் கட்சி ஜெய் மற்றும் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த அருந்ததி கட்சி மாவட்டச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டு நினைவேந்தல் நிகழ்வை சிறப்பித்தனர்.

# அனைத்து விவசாயிகளும் அடையாள எண் பெறுதல், மின்னனு பயிர் பதிவேற்றம் செய்தல் மிக அவசியம் & கலெக்டர் தகவல்



கிருஷ்ணகிரி, ஆக.21-

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் அடையாள எண் பெறுதல் மற்றும் மின்னனு பயிர் பதிவேற்றம் செய்தல் மிகவும் அவசியம் என கலெக்டர் தினேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகள் அரசின் பல்வேறு திட்ட பலன்களை பெறுவதற்கு, தங்களது நில உடமை விவரங்கள், பயிர் சாகுபடி அறிக்கை போன்ற தொடர்புடைய ஆவணங்களை ஒவ்வொரு முறையும் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. இதில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கும் வகையிலும், விவசாயிகள் குறித்த நேரத்தில் பயன்பெற ஏதுவாகவும், தமிழ்நாட்டில் அடுக்குத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

விவசாயிகள் பொது சேவை மையத்தில், தங்கள் நில உடமை விவரங்களை இணைக்கப்பட்ட பின்னர், தனித்துவமான தேசிய அளவிலான அடையாள எண் ஒவ்வொரு விவசாயிக்கும ஏற்படுத்தப்படும். 2025&26ம் ஆண்டு முதல் பிரதம மந்திரி கவுரவ நிதி திட்டம், பயிர் காப்பீடு திட்டம், வேளாண் இடுபொருள் போன்ற ஒன்றிய மற்றும் மாநில அரசின் திட்டங்களில் விவசாயிகள் எளிதில் பயன்பெற தனித்துவ அடையாள எண் மிகவும் அவசியம். இதற்காக வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் பொறியியல் துறை, வேளாண் வணிகத்துறை, பொது சேவை மையம் மற்றும் வருவாய்த்துறையுடன் ஒருங்கிணைந்த சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. ஏற்கனவே விவசாய அடையாள எண் பெற்றுள்ள விவசாயிகள் தங்களுக்கு சொந்தமான அனைத்து நிலங்களையும் பதிவு செய்யாமல், ஒரு பட்டாவில் உள்ள நிலங்களை மட்டுமே பதிவு செய்துள்ளனர். உதாரணமாக ஒரு விவசாயிகளுக்கு 3 பட்டாக்கள் இருந்தால், அதில் ஒரு பட்டாவில் உள்ள நிலத்தை மட்டும் பதிவு செய்து அடையாள எண் பெற்றிருக்கலாம். அவ்வாறு விடுப்பட்டுள்ள விவசாயிகள், எஞ்சியுள்ள அனைத்து நிலங்களின் விவரங்களையும் வேளாண்மைத்துறை அலுவலர்கள் மூலம் விவசாய அடையாள எண்ணுடன் இணைக்க வேண்டும்.

அவ்வாற அனைத்து நில விவரங்களையும் இணைத்தால் மட்டுமே இனி வரும் காலங்களில் விவசாயத்திற்கு தேவையான விதை மற்றும் உரம் போன்ற இடுபொருட்கள் பெற இயலும். எனவே அனைத்து விவசாயிகளும் சிறப்பு முகாம்களை பயன்படுத்தி, அடையாள எண் பெறவும் விடுப்பட்ட நில விவரங்களை இணைக்கவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், பதிவு செய்ய வரும் விவசாயிகள் தங்களது பெயரில் உள்ள அனைத்து பட்டாக்கள், ஆதார் எண் மற்றும் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ள செல்போன் எண் ஆகிய விவரங்களுடன் வேளாண்மை, தோட்டக்கலை மற்றம் வேளாண்மை விற்பனை துறை அலுவலர்களை தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.

எனவே, அனைத்து விவசாயிகளும் தங்களது பெயரில் உள்ள அனைத்து நிலங்களின் விவரங்களையும் உடன் சரிபார்த்து, விடுப்பட்டுள்ள நிலங்கள் இருப்பின் அவற்றை விவசாய அடையாள எண்ணில் இணைத்துகொள்ளவும், விவசாயிகள் தன்னார்வலர்களாக செயல்பட்டு, தங்களது கிராமத்தில் மின்னணு பயிர் கணக்கெடுப்புப் பணியை விரைந்து முடித்திட உதவலாம். இவ்வாறு தனது செய்திக்குறிப்பில் கலெக்டர் தினேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

# நீலகிரி மாவட்டம் குந்தா வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற உங்களை தேடி உங்கள் ஊரில் சிறப்பு முகாமில் மாவட்ட. ஆட்சித்தலைவர் பொது மக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்





நீலகிரி, ஆக.21-

உங்களை தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ், மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு, குந்தா வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற சிறப்பு முகாமில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் வழிகாட்டுதலின்படி, மக்களை நாடி மக்களின் குறைகளை கேட்டு உடனுக்குடன் தீர்வு காணும் வகையில் உங்களை தேடி உங்கள் ஊரில்" திட்ட முகாம் குந்தா வட்டாட்சியர் அலுவலகத்தில நடைபெற்றது. இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை பெற்று கொண்டு, துறை சார்ந்த அலுவலர்களிடம் வழங்கி, அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தினார். அதனை தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், மத்திய கூட்டுறவு வங்கி சார்பில் 1 மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு ரூ.8.00 இலட்சம் மதிப்பிட்டில் கடனுதவியும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சமூக பாதுபாப்பு திட்டத்தின் கீழ் சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூ.1.20 இலட்சம் மதிப்பீட்டில் இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகை பெறுவதற்கான ஆணையினையும், பயனாளிகளுக்கு ரூ.13,000/ த்திற்கான கல்வி உதவித்தொகையினையும், 3 பயனாளிகளுக்கு ரூ.28,000/- த்திற்கான திருமண உதவித்தொகையினையும், 5 பயனாளிகளுக்கு ரூ.25,000/- மதிப்பில் புதிய மின்னனு குடும்ப அட்டைகளையும், தோட்டக்கலைத்துறை சார்பில் 1 பயனாளிக்கு ரூ.30,000 மதிப்பில் நலத்திட்டம் என மொத்தம் 17 பயனாளிகளுக்கு ரூ.9.91 இலட்சம் மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். 4 முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் உங்களை தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ் குந்தா வட்டாட்சியர் அலுவலகத்தில், நடைபெற்ற பல்வேறு அரசுத்துறை அலுவலர்களுடனான ஆய்வு கூட்டத்தில், குந்தா வட்டத்திற்குட்பட்ட பகுதியில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டபணிகள் குறித்து துறை வாரியாக விரிவாக ஆய்வு மேற்கொண்டார். மேலும், பொதுமக்களின் அடிப்படை தேவைகளை முறையாக நிறைவேற்ற வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இக்கூட்டத்தில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அபிலாஷா கௌர் மாவட்ட வருவாய் அலுவலர் வாசுகி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) லோகநாயகி, திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) ரூபன்சங்கர்ராஜ், குந்தா வட்டாட்சியர் .குணவதி, உதகை வட்டார வளர்ச்சி அலுவலாகள் ஸ்ரீதரன், சந்திரசேகரன் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# நதிநீர் பிரச்னை, விவசாய பயிர்கடன் தள்ளுபடி செய்வதில் முதல்வருக்கு அதிகாரிகள் தவறான வழிகாட்டுதலை கொடுக்கின்றனர்

## பி.ஆர்.பாண்டியன் குற்றச்சாட்டு



சென்னை, ஆக.21-

திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் ச.கவிதாவை, தமிழ்நாடு அனைத்து விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு தலைவர் பி.ஆர். பாண்டியன் சந்தித்து மனு ஒன்றை அளித்தார். பின்னர் அவர், நிருபர்களிடம் கூறியதாவது: கொசஸ்தலை, ஆரணி ஆறுகளை இணைத்து நிலத்தடி நீரை மேம்படுத்துவதோடு, பாசன பகுதிகளுக்கு தண்ணீர் தட்டுப்பாட்டை போக்கிட வேண்டும் என்ற கோரிக்கையையும், அதற்கான திட்டங்களை தயார் செய்ய வேண்டும் என்பதை மாவட்ட கலெக்டரிடம் வலியுறுத்தியுள்ளேன். எல்-நினோ தாக்குதலில் இருந்து விவசாயிகளையும், பொது மக்களையும், பாதுகாக்க வேண்டுமானால் நீர்நிலைகளை தூர்வாரி, ஆழப்படுத்தி மழைநீரை தேக்கி வைப்பதன் மூலமாக நிலத்தடி நீர்மட்டத்தை பாதுகாத்து, குடிநீர் தட்டுப்பாட்டை போக்கிட முடியும்.

தொடர்ந்து, தமிழக அரசு விவசாய கடன் தள்ளுபடி விவகாரத்தில் ஏமாற்றத்தை அளித்து வருகிறது. கடந்த 7ம் தேதி 8 அமைச்சர்களின் பேச்சுவார்த்தையின்போது ரூ.1 லட்சம் வரை நிபந்தனை இல்லாமல் தள்ளுபடி செய்வதற்கு ஒப்புதல் கொடுத்தனர். ஆனால் முதலமைச்சரின் அறிவிப்பு அதற்கு நேர்மாறாக அமைந்துள்ளது. கடந்த காலங்களில் தமிழகத்தில் தள்ளுபடி செய்த அந்த வழிகாட்டுதலை பின்பற்றி தவெக அரசும் கடன் தள்ளுபடி செய்ய மறுபரிசீலனை செய்ய வேண்டும். நதிநீர் பிரச்னை, விவசாயிகளின் கடன் தள்ளுபடி விவகாரத்தில் ஒருசில அதிகாரிகள் முதல்வருக்கு தவறான வழிகாட்டுதலை கொடுக்கின்றனர்.

அமைச்சர்கள் சம்பந்தப்பட்ட விவசாயிகளிடம் கலந்து பேசி விவசாயிகளுக்கான திட்டங்களை செயல்படுத முன்வர வேண்டும். மேகதாது அணைக்கு ஒன்றிய அரசு எந்த விதத்திலும் அனுமதி கொடுக்க முடியாது. ராசி மணல் பகுதியில் அணை கட்டுவதற்கு உரிய நடவடிக்கை எடுத்து திமுக ஆட்சி காலத்தில் அதற்கான ஒப்புதல் கொடுத்துள்ளது. கர்நாடக விவசாயிகள் மேகதாது அணைக்கு எதிராக இருக்கிறார்கள்.அதனால் தான் கர்நாடகாவில் கூட்டப்பட்ட அனைத்து கட்சி கூட்டம் தோல்வியில் முடிந்தது. 13ம் தேதி அறிவிக்கப்பட்ட முழு அடைப்பு போராட்டமும் தோல்வியில் முடிந்தது. அங்கு இருக்கக்கூடிய அனைத்து தரப்பு மக்களும் மேகதாது திட்டத்திற்கும் ஆதரவு தரவில்லை. எனவே கர்நாடக முதல்வர், அதனை புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழக விவசாயிகள் ராசிமணலில் அணை கட்டுவதற்கு அனுமதிக்க முன்வர வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை தமிழக அரசு முன்னெடுக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார். இந்நிகழ்வில் விவசாய சங்க மாநில துணை தலைவர் ஆர்.டி.விஜய் பிரசாத், சென்னை மண்டல தலைவர் சீனிவாசன், நிர்வாகிகள் சுரேஷ் பாபு, மோகன கிருஷ்ணா, அகத்தீஸ்வரன், சிவப்பிரகாஷ், திருமால், செல்வகுமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# அரசு புறம்போக்கு நிலத்தில் நொரம்பு மண் கடத்தல் டிப்பர் பறிமுதல்



காவேரிப்பட்டினம், ஆக.21-

காவேரிப்பட்டினம் அருகே பையூர்-1 வருவாய் கிராமத்தில் அரசு புறம்போக்கு நிலத்தில் நொரம்பு மண் கடத்த முயன்ற சம்பவம் நடந்தது. மலைபையூர் மலை அடிவாரத்தில் TN 34 Q 0708 என்ற டாடா மினி டிப்பரில் மண் எடுக்கப்பட்ட நிலையில், ஓட்டுநர் வாகனத்தை விட்டுவிட்டு தப்பியோடினார். தகவலறிந்த அதிகாரிகள் டிப்பர் வாகனத்தை கைப்பற்றி காவேரிப்பட்டினம் காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து தப்பியோடிய நபரை தேடி வருகின்றனர்.

# தேனியில் அமைக்கப்பட்டு வரும் பன்முக சுற்றுலா தலம் - மக்களின் எதிர்பார்ப்புகள் என்ன?

தேனி, ஆக.21-

தேனி பாரம்பரிய மற்றும் இயற்கை வளம் மிக்க மாவட்டமாக இருப்பதால் ஏராளமான ஆன்மிக மற்றும் சுற்றுலா வளங்களை அதிகளவில் பெற்றுள்ளன. இருப்பினும் மாவட்ட தலைநகரான தேனியில் இது போன்ற நிலை குறைவாகவே உள்ளது. ஆகவே இங்கு சுற்றுலா தலத்தை உருவாக்க வேண்டும் என்று பொதுமக்கள் தொடர்ந்து குரல் கொடுத்து வந்தனர்.

இதனைத் தொடர்ந்து தேனி உழவர் சந்தை அருகே உள்ள மீறு சமுத்திர கண்மாய் பன்முக சுற்றுலா மையமாக மாற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதற்காக 120 ஏக்கர் பரப்பிலான இந்த கண்மாய் கரை பலப்படுத்தப்பட்டு 2.5 கிமீ. நீள நடைப்பயிற்சிக்காக தயார் செய்யப்பட்டு வருகிறது. மேலும் இங்கு உடற்பயிற்சி கூடம், பூங்கா, மாதிரி தீவு கட்டமைப்பு, படகு குழாம் உள்ளிட்ட பணிகள் ரூ.7.40 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் இந்த கண்மாயின் மறுகால் மதகு கரைகளை நடைபயிற்சி பாதையுடன் இணைக்க 25 டன் எடையிலான இரும்பு பாலம் அமைக்கும் பணிகள் தொடங்கி உள்ளன.

மேலும் கரை நெடுகிலும் பல்வேறு கடைகள், சுற்றுலா மற்றும் கலைநய பொருட்கள் விற்பனை மற்றும் அடிப்படை வசதிகளுக்கான கட்டுமானங்கள் நடைபெற்று வருகின்றன.

அக்டோபர், நவம்பரில் இது பயன்பாட்டுக்கு வரும் என்று நீர்வளத்துறையினர் தெரிவித்தனர். இது குறித்து சுற்றுலா ஆர்வலர்கள் கூறுகையில், இங்கு வெறுமனே ஊஞ்சல், சறுக்கல் என்று வழக்கமானதாக இல்லாமல் ஆர்வம் ஏற்படுத்தும் தன்மையை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும்.

குறிப்பாக ஒரு முனையில் நுழைந்து பல குழப்பமான கிளை வழிகளை கடந்து பின்பு சரியான வழியில் வெளியேறுவதுபோன்று குதூகலம் அளிக்கும் புதிர்பாதை செயல்பாடுகளையும் இங்கு செயல்படுத்த வேண்டும் என்றனர்.

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வைக்கோல் தட்டுப்பாடு : நெல் சாகுபடி பரப்பு குறைந்ததால் கால்நடைகளுக்கு தீவனத் தட்டுப்பாடு கட்டு ரூ.300-க்கு விற்பனை



கிருஷ்ணகிரி, ஆக.21-

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பருவமழை போதிய அளவில் பெய்யாததாலும், நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருவதாலும் நெல் சாகுபடி பரப்பு கணிசமாக குறைந்துள்ளது. இதன் காரணமாக கால்நடைகளுக்கான முக்கிய தீவனமான வைக்கோலுக்கும் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. காவேரிப்பட்டினம் அருகே உள்ள பையூர் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பெரும்பாலான விவசாயிகள் தண்ணீர் பற்றாக்குறை காரணமாக நெல் சாகுபடியைத் தவிர்த்து மல்லிகை உள்ளிட்ட மாற்றுப் பயிர்களை சாகுபடி செய்து வருகின்றனர். இதனால் நெல் அறுவடைக்குப் பிறகு கிடைக்கும் வைக்கோலின் அளவும் வெகுவாகக் குறைந்துள்ளது. இதன் காரணமாக கால்நடைகளை வளர்த்து வரும் விவசாயிகள் தற்போது வெளியூர்களில் இருந்து வைக்கோலை விலைக்கு வாங்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். காவேரிப்பட்டினம் பையூர் அருகே உள்ள பகுதிகளில் ஆரணி உள்ளிட்ட வெளி மாவட்டங்களில் இருந்து வைக்கோல் கட்டுகள் வாகனங்களில் மொத்தமாகக் கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. ஒரு கட்டு சுமார் ரூ.300 வரை விற்பனை செய்யப்படுகிறது. வைக்கோல் தட்டுப்பாடு அதிகரித்துள்ளதால், கால்நடைகளை வைத்துள்ள விவசாயிகள் தங்களது தேவைக்கேற்ப ஒரே நேரத்தில் 15 முதல் 30 கட்டுகள் வரை வாங்கிச் செல்கின்றனர். இதனால் வைக்கோல் விற்பனை செய்யப்படும் இடங்களில் விவசாயிகள் கூட்டம் காணப்படுகிறது. இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், மேட்டுப்பகுதிகளில் உள்ள கிணறுகளின் நீர்மட்டம் தொடர்ந்து குறைந்து வருகிறது. விவசாயம் செய்வதற்குத் தேவையான அளவு தண்ணீர் கிடைக்காததால் நெல் சாகுபடி செய்வதில் அதிக செலவும், நஷ்டமும் ஏற்படுகிறது. இதனால் பலர் நெல் சாகுபடியைத் தவிர்த்து மாற்றுப் பயிர்களுக்கு மாறி வருகின்றனர். நெல் விளைச்சல் குறைந்துள்ளதால் அதிலிருந்து கிடைக்கும் வைக்கோலின் அளவும் குறைந்துவிட்டது. கால்நடைகளை வளர்க்கும் விவசாயிகளுக்கு வைக்கோல் அத்தியாவசியமானதாக இருப்பதால், தற்போது வெளியூர்களில் இருந்து அதிக விலை கொடுத்து வைக்கோலை வாங்கிச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர். மேலும், வைக்கோல் விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால் கால்நடைகளை பராமரிக்கும் செலவும் அதிகரித்துள்ளது. எனவே, மாவட்ட நிர்வாகம் விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு அரசு சார்பில் வைக்கோல் விற்பனை மையங்களை அமைத்து, குறைந்த விலையில் வைக்கோல் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். வைக்கோல் தட்டுப்பாட்டை போக்கவும், கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு ஏற்படும் கூடுதல் செலவை குறைக்கவும் மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே விவசாயிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது.



# நீட் தேர்வில் வெற்றி பெற்ற மானாமதுரை மாணவிகளுக்கு பாராட்டு





சிவகங்கை, ஆக.21-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை கல்குறிச்சியைச் சேர்ந்த ரக்சிதா மற்றும் கொன்னகுளம் ஊராட்சி மனக்குளம் கிராமத்தைச் சேர்ந்த அபிநயா ஆகியோர் NEET நுழைவுத் தேர்வில் வெற்றி பெற்று மருத்துவப் படிப்பில் சேரும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். ரக்சிதா திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரியிலும், அபிநயா தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரியிலும் MBBS படித்து வருகின்றனர். மாணவிகளின் சாதனையை பாராட்டி, மானாமதுரை நகர்மன்ற தலைவர் மாரியப்பன் கென்னடி பரிசு மற்றும் உதவித்தொகை வழங்கி வாழ்த்தினார். நிகழ்ச்சியில் திமுக மானாமதுரை கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாமணி, வடக்கு ஒன்றிய செயலாளர் முத்துசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



# தமிழ்நாடு அறிவியல் இயக்க வினாடி வினா போட்டி

சிவகங்கை, ஆக.21-

தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பில் மாணவர்களின் அறிவியல் சிந்தனை மற்றும் தேடலை மேம்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் மாவட்ட அளவிலான வினாடி வினா போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டிற்கான போட்டியில் 6 முதல் 8-ஆம் வகுப்பு வரை இளநிலைப் பிரிவு (ஜூனியர்), 9 மற்றும் 10-ஆம் வகுப்புகள் உயர்நிலைப் பிரிவு (சீனியர்), 11 மற்றும் 12-ஆம் வகுப்புகள் மேல்நிலைப் பிரிவு (சூப்பர் சீனியர்) என மூன்று பிரிவுகளில் மாணவ, மாணவிகள் பங்கேற்கலாம். சிவகங்கை மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு தனியாகவும், மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகளுக்கு தனியாகவும் ஒரே நாளில் போட்டிகள் நடத்தப்பட உள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் ஒரு பள்ளியிலிருந்து மூன்று மாணவ, மாணவிகள் கொண்ட ஒரு குழு பங்கேற்கலாம். பங்கேற்கும் பள்ளிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து போட்டி இரண்டு சுற்றுகளாக நடைபெறும். முதல் சுற்று எழுத்துத் தேர்வாகவும், இரண்டாவது சுற்று வாய்மொழித் தேர்வாகவும் நடத்தப்படும்.

போட்டியாளர்கள் தலைமையாசிரியரின் ஒப்புதல் கடிதம், தேர்வு அட்டை மற்றும் தேவையான எழுது பொருட்களுடன் பள்ளிச் சீருடையில் பங்கேற்க வேண்டும். போட்டி ஆகஸ்ட் 29-ஆம் தேதி காலை 9.30 மணிக்கு சிவகங்கை மாவட்டத்தில் உள்ள ஒரு பள்ளியில் நடைபெறும். போட்டி நடைபெறும் இடம் பின்னர் அறிவிக்கப்படும். மாவட்ட அளவிலான போட்டியில் வெற்றி பெறுபவர்கள் மாநில அளவிலான போட்டியில் பங்கேற்க வாய்ப்பு பெறுவர். மாநிலப் போட்டியில் வெற்றி பெறும் மாணவர்கள் அறிவியல் சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டு விஞ்ஞானிகளுடன் கலந்துரையாடும் வாய்ப்பும் வழங்கப்படும். முன்பதிவு மற்றும் கூடுதல் விவரங்களுக்கு தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டச் செயலாளர் பிரபு 99440 89151 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

# ‘டிஜிட்டல் அரெஸ்ட்’ ஆன்லைன் மோசடி: பொதுமக்கள் ஏமாற வேண்டாம் சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எச்சரிக்கை!



சிவகங்கை ஆக.21-

பொதுமக்களை மிரட்டி பணம் பறிக்கும் நோக்கில் நடைபெறும் ’டிஜிட்டல் அரெஸ்ட்’ (Digital Arrest) சைபர் மோசடிகள் குறித்து பொதுமக்கள் விழிப்புணர்வுடன் இருக்குமாறு சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள விழிப்புணர்வு செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது:

சமீபகாலமாக ’டிஜிட்டல் அரெஸ்ட்’ என்ற பெயரில் சைபர் குற்றவாளிகள் பொதுமக்களைத் தொடர்பு கொண்டு மோசடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மோசடி நடைபெறும் விதம்: உங்கள் பெயரில் வந்துள்ள பார்சலில் போதைப்பொருள் உள்ளது என்றோ, அல்லது உங்கள் வங்கிக் கணக்கில் பல கோடி ரூபாய் மதிப்பிலான சந்தேகத்திற்கிடமான பணப் பரிவர்த்தனைகள் நடந்துள்ளன என்றோ கூறி மிரட்டுகின்றனர்.

சிபிஐ (CBI), அமலாக்கத்துறை (ED) அல்லது சுங்கத்துறை (Customs) போன்ற மத்திய புலனாய்வு அமைப்புகளின் உயர் அதிகாரிகள் போல் நடித்து வீடியோ/ஆடியோ அழைப்புகள் செய்கின்றனர்.

வழக்கில் இருந்து தப்பிக்க உடனடியாகப் பணம் அனுப்ப வேண்டும், இல்லையென்றால் உடனடியாகக் கைது செய்து சிறையில் அடைத்து விடுவோம் எனப் பயமுறுத்தி பணத்தைப் பறிக்க முயல்கின்றனர்.

பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்: இதுபோன்ற மிரட்டல் அழைப்புகளைக் கண்டு பொதுமக்கள் யாரும் அச்சப்படத் தேவையில்லை.

சட்டம் மற்றும் காவல்துறையில் ’டிஜிட்டல் அரெஸ்ட்’ என்ற நடைமுறையே கிடையாது; இது முழுக்க முழுக்க ஒரு சைபர் மோசடி வலைப்பின்னல். எந்தவொரு அரசு அல்லது புலனாய்வு அமைப்பும் ஆன்லைன் மூலமாக மிரட்டி பணம் கேட்காது. எனவே, பொதுமக்கள் யாரும் இத்தகைய நபர்களுக்குப் பணம் அனுப்பக் கூடாது.

புகார் அளிக்க வேண்டிய எண்: இதுபோன்ற மோசடி அல்லது மிரட்டல் அழைப்புகள் வந்தால், உடனடியாக 1930 என்ற சைபர் கிரைம் உதவி எண்ணை (Cyber Helpline) தொடர்புகொண்டு புகார் தெரிவிக்கலாம். புகாரின் பேரில் உரிய சட்ட நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறுமிக்கு பாலியல் தொல்லை முயற்சி மர்ம நபருக்கு வலைவீச்சு

## துரிதமாக செயல்பட்ட திமுக ஒன்றியச் செயலாளர் நா. நெடுஞ்செழியன்

சிவகங்கை, ஆக.21-



சிவகங்கை மாவட்டம் கல்லல் ஒன்றியத்திற்குட்பட்ட கிராமப் பகுதியில், வீட்டில் தனியாக இருந்த சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுக்க முயன்றதாக கூறப்படும் மர்ம நபரை போலீசார் தேடி வருகின்றனர். ஆலங்குடியைச் சேர்ந்த பெண் ஒருவர், தனது தாயாருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டதால் மருத்துவமனைக்குச் சென்றிருந்தார். அப்போது வீட்டில் அவரது இரு குழந்தைகள் மட்டும் இருந்துள்ளனர். இதனை நோட்டமிட்ட மர்ம நபர், வீட்டிற்குள் புகுந்து ஆண் குழந்தையை அறைக்குள் பூட்டிவிட்டு, சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுக்க முயன்றதாக கூறப்படுகிறது. சிறுமியின் அலறல் சத்தம் கேட்டு வந்த பக்கத்து வீட்டுப் பெண் கூச்சலிட்டதைத் தொடர்ந்து, கல்லல் திமுக ஒன்றியச் செயலாளர் நா. நெடுஞ்செழியன் மற்றும் கிராம மக்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். அவர்கள் அந்த நபரை பிடிக்க முயன்றபோது அவர் தப்பியோடி தலைமறைவானார். இதுகுறித்து உடனடியாக காவல்துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. மீட்கப்பட்ட சிறுமி பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார். குழந்தைகளை வீட்டில் தனியாக விட்டுச் செல்லும்போது பாதுகாப்பில் கூடுதல் கவனம் செலுத்துமாறு பெற்றோருக்கு நெடுஞ்செழியன் அறிவுறுத்தினார். துரிதமாக செயல்பட்ட நெடுஞ்செழியனை கிராம மக்கள் பாராட்டினர். தப்பியோடிய நபரை போலீசார் தேடி வருகின்றனர்..



# பெண்களுக்கு கிராமத் தொழில்கள் குறித்த விழிப்புணர்வு முகாம்

சிவகங்கை, ஆக.21-

சிவகங்கையில் பெண்களுக்கு கிராமத் தொழில்கள் மற்றும் சுயதொழில் வாய்ப்புகள் குறித்த விழிப்புணர்வு முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது. மதுரை கதர் மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையத்தின் கோட்ட அலுவலகம், சிவகங்கை வீனஸ் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் ஆகியவை இணைந்து முகாமை நடத்தின. வீனஸ் ஃபவுண்டேஷன் நிறுவனர் அ.பூமிநாதன் வரவேற்றார். மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் பிரவீன்குமார், கதர் மற்றும் கிராமத் தொழில்கள் ஆணைய உதவி இயக்குநர் டி.வி. அன்புச்செழியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முகாமில் எம்.எஸ்.எம்.இ. உதவி இயக்குநர் உமா சந்திரிகா, மாவட்ட தொழில் மையத்தைச் சேர்ந்த சுந்தரேசன் உள்ளிட்டோர் பங்கேற்று, பெண்களுக்கான சுயதொழில் திட்டங்கள், தொழில் தொடங்குவதற்கான வாய்ப்புகள் மற்றும் அரசு உதவித் திட்டங்கள் குறித்து விளக்கினர். மேலும், கிராமத் தொழில்களுக்கான பயிற்சி மற்றும் உபகரணங்கள் வழங்கும் திட்டங்கள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. நிறைவாக மறவமங்களம் கவிதா ராஜ்குமார் நன்றி கூறினார்.





# வேலுநாச்சியார் நினைவு பெண்கள் ஹாக்கிப் போட்டி வெற்றி பெற்ற வீராங்கனைகளுக்கு ரொக்கப் பரிசு

சிவகங்கை, ஆக.21-

சிவகங்கையில் வீரமங்கை வேலுநாச்சியார் நினைவாக நடைபெற்ற மாநில அளவிலான பெண்கள் ஹாக்கிப் போட்டியில் வெற்றி பெற்ற வீராங்கனைகளுக்கு ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் தமிழக வெற்றிக் கழக பிரமுகரும், சமூக ஆர்வலருமான அரிமா கல்பனா சபேசன் கலந்து கொண்டு வெற்றி பெற்ற வீராங்கனைகளுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டினார்.



# பாத்திமா கல்லூரியில் போக்குவரத்து விழிப்புணர்வு முகாம்

மதுரை, ஆக.21-

மதுரை பாத்திமா கல்லூரியில் இளைஞர் செஞ்சிலுவை சங்கம் (YRC) சார்ந்த மாணவிகளுக்காக, மதுரை மாநகர போக்குவரத்து காவல்துறை சார்பில் போக்குவரத்து விழிப்புணர்வு சிறப்பு முகாம் நடைபெற்றது. “போக்குவரத்து விழிப்புணர்வு உங்களிடமிருந்தே தொடங்க வேண்டும்” என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில், தல்லாகுளம் போக்குவரத்து காவல் ஆய்வாளர் ஜி. பூர்ணகிருஷ்ணன் கலந்து கொண்டு மாணவிகளுக்கு போக்குவரத்து விதிமுறைகள் மற்றும் சாலை பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மேலும், சமூகத்திலும் மாநகர போக்குவரத்து முன்னேற்றத்திலும் மாணவிகள் எவ்வாறு தங்களது பங்களிப்பை வழங்கலாம் என்பது குறித்தும் அவர் விரிவாக எடுத்துரைத்தார். இந்த சிறப்பு முகாமை பாத்திமா கல்லூரி போக்குவரத்து கிளப் மாணவியர் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியை சங்கீதா ஏற்பாடு செய்திருந்தார். இதில் 300-க்கும் மேற்பட்ட மாணவிகளும், 5 பேராசிரியைகளும் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் நிறைவில், போக்குவரத்து விதிகளை கடைப்பிடித்து சாலை பாதுகாப்பை உறுதி செய்வோம் என மாணவிகளும் பேராசிரியைகளும் காவல் ஆய்வாளர் முன்னிலையில் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.



■ "உங்களைத் தேடி உங்கள் ஊரில்” திட்டத்தின் கீழ், திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி ஊராட்சி ஒன்றியம், விசமங்கலம் ஊராட்சியில் வளர்ச்சியடைந்த பாரதம் கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதார திட்டத்தின் கீழ் (VB GRAM-G) சமுதாய நீர் சேகரிப்பு குளம் (26X26m) வெட்டும் பணியானது முன் அளவீடு செய்யப்பட்டு நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., (19.08.2026) அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் கந்திலி ஒன்றிய குழுத்தலைவர் திருமதி திருமுருகன், வட்டாட்சியர் நவநீதன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சித்ரகலா லதா, கந்திலி ஒன்றிய பொறியாளர் கார்த்திகேயன் மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161